**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**கலை கலாசார பீடம்**

**மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு**

**2013/2014 (August/ September 2018)**

**GYS 3233 இலங்கையின் மானிடப் புவியியல் (Human Geography of Sri Lanka)**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

---

**பகுதி I**

1. அ) இலங்கையின் குடித்தொகை தரவுகளை பெற்றுக்கொள்வதில் குடிக்கணிப்பு முறையின் பங்களிப்பு தொடர்பாக சுருக்கமாக விளக்குக. (08புள்ளிகள்)

   ஆ) இலங்கையில் குடித்தொகை பரம்பல் பிரதேச ரீதியாக வேறுபடுவதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு, அதில் பௌதிகக் காரணிகளின் செல்வாக்கு தொடர்பாக விபரிக்குக. (12புள்ளிகள்)

2. அ) இலங்கையில் பாரிய கைத்தொழில்களின் விருத்தியானது மந்தகதியில் காணப்படுவதற்கான காரணங்களை சுருக்கமாக விபரிக்குக. (05 புள்ளிகள)

   ஆ) இலங்கையில் சிறு மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை விளக்குக. (07 புள்ளிகள்)

   இ) கடந்த மூன்று தசாப்த காலங்களில் இலங்கையின் கைத்தொழில் துறையினை விருத்தி செய்ய அரசாங்கம் மேற்கொண்டு வந்துள்ள நடவடிக்கைகளை சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

3. அ) தொழிற்பாடுகளின் அடிப்படையில் இலங்கையின் நகரங்களை வகைப்படுத்துக.
(03 புள்ளிகள்)

ஆ) இலங்கையிலுள்ள நகரங்களை விருத்தி செய்யும் போது எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாக கருத்துரைக்குக (07 புள்ளிகள்)

இ) இலங்கையின் கொழும்பு நகரத்தினை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகளை ஆராய்க. (10 புள்ளிகள்)

## பகுதி II

4. இலங்கையில் வறுமை ஒழிப்புக்காக முன்னெடுக்கப்படும் திட்டங்கள் எந்தளவுக்கு வெற்றியளித்துள்ளன என்பதனை உதாரணங்களுடன் ஆராய்க.
(20 புள்ளிகள்)

5. "இலங்கையில் வினைத்திறனான தொழிற்சந்தையினை உருவாக்குவதில் பல்வேறுபட்ட சவால்கள் காணப்படுகின்றன" இக்கருத்தினை ஏற்றுக்கொள்கின்றீர் ஆராய்க.
(20 புள்ளிகள்)

6. "இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் பங்களிப்பு" என்ற தலைப்பில் 300 சொற்களுக்கு மேற்படாமல் ஓர் கட்டுரை வரை
(20 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் **இரண்டினிற்கு** விளக்கக்குறிப்புரை எழுதுக.

அ) மனிதவள அபிவிருத்தி தொடர்பில் அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகள்

ஆ) இலங்கையின் சுற்றுலாத்துறை விருத்தியில் அரசாங்கத்தின் பங்களிப்

இ) இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பு (10x2=20 புள்ளிகள்)